# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

(தேசியத் தரமதிப்பீட்டுக்குழுவின் B+ தகுதி பெற்றது)

TAMIL UNIVERSITY, THANJAVUR

(ACCREDITED BY NAAC WITH B+ GRADE)

## முனைவர் பட்டப் படிப்புகளுக்கான (முழு நேரம் / பகுதி நேரம்) நுழைவுத் தேர்வு, சேர்க்கை விவரக்கையேடு – 2020

## Prospectus for Tamil University Research Programmes - Common Entrance Test (TURCET) for Ph.D. Admission - 2020

**இணையதளம்** : www.tamiluniversity.ac.in

**தொடர்பிற்கு:**

1. **தொலைபேசி** : 04362-227089, 226720 (அலுவலக நேரம் மட்டும்)
2. **மின்னஞ்சல்** : tuadmissionsection@gmail.com

---

**குறிப்பு:** தீநுண்மிப் பரவலைக் கருத்தில் கொண்டு, விண்ணப்பத்தைப் பெறுவதற்கோ நிறைவு செய்த விண்ணப்பத்தை அளிப்பதற்கோ யாரும் நேரில் வரவேண்டியதில்லை.

# பொருளடக்கம்

## பகுதி 1 - அறிமுகம்

பக்கம்

1. தோற்றுவாய் 03
2. சிறப்புகள், வசதிகள் 03
3. முனைவர் பட்டச் சேர்க்கைப் படிநிலைகள் 04
4. முனைவர் பட்டம் வழங்கும் துறைகள், ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு மையங்கள் முனைவர் பட்டப் படிப்புகள் 05

**பகுதி 2 -தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு (TURCET)**

5. நுழைவுத் தேர்வு விதிமுறைகள் 07
6. நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முறை 10
7. இணைய விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முறை 10
8. நுழைவுத் தேர்வுக் கட்டணம் 12
9. நுழைவுத் தேர்வு – வினா வடிவமைப்பு 12
10. நுழைவுத் தேர்வுக்கான பாடத் திட்டம் 12

**பகுதி 3 - முனைவர் பட்டச் சேர்க்கை**

11. முனைவர் பட்டச் சேர்க்கைக்கு விண்ணப்பித்தல் 12
12. நேர்காணல் 13
13. சேர்க்கை விண்ணப்பக் கட்டணம் 13
14. சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் முறை 13
15. இணைய விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முறை 14
16. சேர்க்கை தொடர்பான கட்டண விவரங்கள் 14

பின்னிணைப்பு 1. முனைவர் பட்டச் சேர்க்கைக்கான பாடங்கள், தகுதிகள், ஒழிவிட விவரங்கள் (2020) 16

பின்னிணைப்பு 2. நுழைவுத் தேர்வு விண்ணப்பம் 21

பின்னிணைப்பு 3. முனைவர் பட்டச் சேர்க்கை விண்ணப்பம் 25

# பகுதி 1- அறிமுகம்

## 1. தோற்றுவாய்

தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, கலை, அறிவியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக1981ஆம் ஆண்டு செப்தம்பர் திங்கள் 15ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது. தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில், தஞ்சை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இயற்கை வளம் சூழ்ந்த எழில் மிகு நிலப்பரப்பில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) B+ தரப்புள்ளி பெற்ற இப்பல்கலைக்கழகம் ஐந்து புலங்களில் இருபத்தாறு துறைகளுடன் இயங்கி வருகின்றது.

## 2. சிறப்புகள், வசதிகள்

- தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஆய்வு நூலகம்
- சிறந்த கல்வியாளர்களால் பயிற்றுவிக்கப்படுதல்
- மாணவர்கள் இணையதளத்தைப் பயன்படுத்த அருகலை வசதி (WiFi)
- வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம்
- ஆய்வுக்கூட வசதி
- இருபாலருக்கான தனித்தனி விடுதி வசதி
- பட்டியல்/பழங்குடி இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட/பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மத்திய, மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை
- பல்கலைக்கழக நல்கைக் குழுவால் வழங்கப்படும் தேசியத் தகுதித்தேர்வு / மாநிலத் தகுதித் தேர்வுக்கான இலவசப் பயிற்சி (NET/SET/UGC-CSIR JRF)
- இலவச யோகா பயிற்சி
- மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சிக்கூடம், தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம்

## 3.முனைவர் பட்டச் சேர்க்கைப் படிநிலைகள்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வுப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு (TURCET)

↓

விண்ணப்பித்தல்

↓

பொது நுழைவுத் தேர்வு (TURCET)

**விதிவிலக்கு: NET/SET /JRF தகுதி பெற்றவர்களுக்கும், ICCR நல்கை பெற்றவர்களுக்கும், அயலக மாணவர்களுக்கும் முனைவர் பட்ட ப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்விலிருந்து விதிவிலக்கு உண்டு**

↓

தேர்வு முடிவுகள் வெளியீடு

↓

சேர்க்கை அறிவிப்பு

↓

சேர்க்கைக்கு விண்ணப்பித்தல்

↓

நேர்காணல்

↓

மாணவர் சேர்க்கை

## 4.முனைவர் பட்டம் வழங்கும் துறைகள், ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு மையங்கள், முனைவர் பட்டப் படிப்புகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் ஏற்பளிக்கப்பெற்ற ஆய்வு மையங்களிலும் முழுநேர/பகுதிநேர முனைவர் பட்டப்படிப்பிற்குச் சேர்க்கை பெற (விலக்களிக்கப் பெற்றவர்கள் தவிர) விரும்புவோர், "தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வுப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு" (TURCET) எழுதித் தகுதி பெறவேண்டும்.

துறைகளில் அளிக்கப்பெறும் முனைவர் பட்டப் படிப்புகள் அவற்றிற்கான தகுதிகள், ஒழிவிடங்கள் ஆகியவற்றைப் பின்னிணைப்பு 1இல் காண்க. தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு கீழ்க்காணும் பாடத் தொகுப்புகளில் (subject Groups) நடைபெறும்.

**முனைவர் பட்டச் சேர்க்கைக்கான படிப்புகள் மற்றும் நுழைவுத் தேர்வுக்கான பாடத் தொகுப்புகள்**

| முனைவர் பட்டப் படிப்புகள்<br>Ph.D Subjects | நுழைவுத் தேர்வுக்கான பாடத் தொகுப்புகள்<br>Subject Groups |
|---|---|
| வரலாறு - History<br>வரலாறு–நுண்கலை - History-Fine Arts<br>கலைவரலாறு - Art History<br>நுண்கலை - Fine Arts<br>வரலாறு-சிற்பம் - History-Sculpture<br>வரலாறு –சுவடியியல் - History –Manuscriptology<br>வரலாறு -கல்வெட்டியல் - History-Epigraphy<br>தொல்லியல் - Archaeology<br>கடல்சார் தொல்லியல்- Marine Archaeology | வரலாறு தொடர்புடைய பாடத்தொகுப்பு - History Group |
| இசை - Music<br>பரதநாட்டியம் - Bharathanatiyam | இசை மற்றும் பரதநாட்டியம்<br>Music and Bharathanattiyam |
| தமிழ் - Tamil<br>தமிழ் - சுவடியியல் - Tamil –Manuscriptology<br>அகராதியியல் - Lexicography | தமிழ் - Tamil |
| ஆங்கிலம் - English | ஆங்கிலம் - English |
| மொழிபெயர்ப்பியல் - Translation | மொழிபெயர்ப்பியல் - Translation |
| மொழியியல் - Linguistics | மொழியியல் - Linguistics |
| சமூகப்பணி - Social Work, சமூகவியல் - Sociology | சமூகப்பணி – Social Work |
| கல்வியியல்- Education | கல்வியியல்- Education |
| மெய்யியல் - Philosophy | மெய்யியல் – Philosophy |

| | |
|---|---|
| கோயில் நிருவாகம் - Temple Management<br>யோகா - Yoga<br>பண்பாடு – Culture | |
| மானிடவியல் - Anthropology | மானிடவியல் - Anthropology |
| நாட்டுப்புறவியல் - Folklore | நாட்டுப்புறவியல் - Folklore |
| ஒப்பிலக்கியம் - Comparative Literature | ஒப்பிலக்கியம் - Comparative Literature |
| சித்தமருத்துவம் - Siddha Medicine<br>மருந்து அறிவியல் - Pharmaceutical Sciences<br>உயிர் வேதியியல் - Biochemistry<br>தாவரவியல் - Botany<br>வேதியியல் - Chemistry<br>மருத்துவத் தாவரவியல் - Medicinal Botany<br>உயிர்த் தொழில்நுட்பவியல் - Biotechnology<br>நுண்ணுயிரியல் - Microbiology<br>தாவரவியல் - Botany | சித்தமருத்துவம் - Siddha Medicine |
| நிலத்தியல் - Geology<br>பயன்பாட்டு நிலத்தியல் - Applied Geology<br>நிலஅறிவியல் - Earth Science<br>தொலையுணர்வியல் - Remote Sensing<br>புவியியல் - Geography<br>புவிசார்தகவலியல் – Geoinformatics | நிலஅறிவியல்– Earth Science |
| தாவரவியல் - Botany<br>உயிர்த் தொழில்நுட்பவியல் - Biotechnology<br>பட்டுவளர்ப்பு - Sericulture<br>வனவியல் – Forestry | தாவரவியல்– Botany |
| கணிதம் - Mathematics | கணிதம் - Mathematics |
| கணிப்பொறி அறிவியல் - Computer Science | கணிப்பொறியியல் – Computer Science |
| சுற்றுச்சூழல் அறிவியல் - Environmental Science<br>சுற்றுச்சூழல்-உயிர்த் தொழில்நுட்பவியல்- Environmental Biotechnology<br>சுற்றுச்சூழல் நுண்ணுயிரியல் - Environmental Microbiology<br>நுண்ணுயிரியல் - Microbiology<br>உயிர்த் தொழில்நுட்பவியல் - Bio-technology<br>சுற்றுச்சூழல் மேலாண்மை – Environmental Management | சுற்றுச்சூழல் அறிவியல் – Environmental Science |
| நூலகம் மற்றும் தகவல் அறிவியல் -<br>Library and information Science | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் -<br>Library and information Science |

# பகுதி 2 - தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு (TURCET)

## 5.நுழைவுத் தேர்வு விதிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விரிவான முனைவர் பட்ட நெறிமுறைகளை அறிய, தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (www.tamiluniversity.ac.in) உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் (Ph.D. Regulations) பார்க்கவும். நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முன்னர் உங்களது முதுகலைப் பட்டம் தொடர்பான படிப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் அளிக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். (காண்க - பின்னிணைப்பு - 1)

### பயிற்று மொழி

- அனைத்து முனைவர்பட்டப் படிப்புகளுக்கும் பயிற்றுமொழி தமிழாகும். ஆய்வேடு தமிழ் மொழியில் அளிக்கப்படவேண்டும்.

*குறிப்பு: அறிவியல் படிப்புகளில் ஆய்வுசெய்பவர்கள், ஆய்வு ஆலோசனைக் குழுவின் (Research Advisory Committee –RAC) பரிந்துரையுடன், நிருவாக அனுமதி பெற்று முனைவர் பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு ஆங்கிலத்தில் ஆய்வேட்டை அளிக்கலாம். அயலக மாணவர்களும் அயல் மாநில மாணவர்களும் ஆங்கிலத்தில் ஆய்வேடுகளை அளிக்கலாம். மொழிபெயர்ப்பியல் மற்றும் மொழியியல் துறைகளில் ஆங்கிலப் படிப்பிற்கும் கல்வியியல் துறையில் ஆங்கிலக் கல்வி (ELT) தொடர்பான படிப்பிற்கும் ஆங்கிலத்தில் ஆய்வேடுகளை அளிக்கலாம்.*

### நுழைவுத் தேர்வு மொழி

தமிழ், மனிதவியல், சமூக அறிவியல் தொடர்புடைய பாடங்களில் முனைவர் பட்ட நுழைவுத் தேர்வு தமிழில் மட்டும் நடைபெறும். அயலக மாணவர்களும் அயல் மாநில மாணவர்களும் தேவைப்படின் நுழைவுத் தேர்வை ஆங்கிலத்தில் எழுதலாம். ஆங்கிலம் தொடர்பான பாடங்களுக்கு நுழைவுத் தேர்வு ஆங்கிலத்தில் மட்டும் நடைபெறும். அறிவியல் புல மாணவர்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் நுழைவுத் தேர்வை எழுதலாம்.

### Medium of TURCET (Exam )

TURCET (Exam) shall be held only in Tamil for Tamil, Humanities and Social Science related subjects. Those from outside India and other states of India may opt to write the TURCET in Tamil or English. For English related subjects, TURCET Exam shall be held only in English. For Science subjects TURCET shall be held both in Tamil and English.

**கல்வித்தகுதி**

- உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி ஏற்பளிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3+2 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.
- பொதுப்பிரிவினர் முதுநிலையில் 55% (விழுக்காடு) மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தரம் (grade) பெற்றிருத்தல் வேண்டும். பட்டியல் இனத்தவர் / அருந்ததியர் / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / மாற்றுத் திறனாளிகள் ஆகிய பிரிவினருக்கும் 19 செப்டம்பர் 1991க்கு முன்னர் முதுநிலைப் படிப்பை முடித்தவர்களுக்கும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிமுறைகளின்படி முதுநிலைப் பட்டப்படிப்பில் 5% (விழுக்காடு) மதிப்பெண் அல்லது அதற்கு இணையான தரத்தில் (Grade) சலுகை அளிக்கப்பெறும். (சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்)
- சித்தமருத்துவப் படிப்பில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+5+3 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

**பகுதி நேரம்**

**பகுதி நேர முனைவர் பட்டப் படிப்புகளுக்கு மேற்கண்ட கல்வித்தகுதிகளுடன் கீழ்க்காணும் தகுதிகளும் அவசியமாகும்.**

- பகுதி நேர முனைவர் பட்டப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு அரசுப் பல்கலைக்கழகம், அரசுக் கல்லூரி, அரசு உதவிபெறும் கல்லூரி, அரசு ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றில் ஊதிய நிரக்குடன் நிரந்தரப் பணியில் ஓர் ஆண்டுக்காலம் பணிபுரிந்திருக்கவேண்டும்.
- அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதிக் கல்லூரிகளில் தற்காலிக நிலையில் உதவிப் பேராசிரியராக இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு செய்தவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பகுதி நேர முனைவர் பட்டப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வுக்கு.விண்ணப்பிக்கலாம். அவர்கள் நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும்போது இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு பெற்றிருக்கவேண்டும். நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாளன்று (07-10-2020) இரண்டாண்டு பணி நிறைவு பெற்றிருக்க வேண்டும்.
- மேற்கண்ட பிரிவினர் நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாளன்று (07-10-2020) மேற்குறிப்பிட்டவாறு பணியனுபவம் நிறைவுற்றிருக்கவேண்டும்.

- அவர்கள், நுழைவுத் தேர்வில் தகுதிபெற்று முனைவர் பட்டப் பதிவிற்காக விண்ணப்பிக்கும் போது, பணிச்சான்றிதழையும், பணிபுரியும் நிறுவனத்தின் தடையில்லாச் சான்றையும் இணைக்கவேண்டும்.
- அரசு, அரசு உதவிபெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஊதிய நிரக்குடன் நிரந்தரப் பணியில் இரண்டாண்டுக் காலம் பணிபுரிந்திருக்க வேண்டும். அரசு, அரசு உதவிபெறும் தொடக்கநிலை மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஊதிய நிரக்குடன் நிரந்தரப் பணியில், ஐந்தாண்டுக்காலம் பணிபுரிந்திருக்கவேண்டும்.
- பணிபுரியும் நிறுவனத்தின் தடையில்லாச் சான்றைச் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் போது இணைக்க வேண்டும்.

**பிற விதிமுறைகள்**

- முழுமையாக நிறைவு செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- நுழைவுத் தேர்வு, துறை சார்ந்த அல்லது பொதுவான பாடங்கள் (பாடத் தொகுப்பு –Subject Groups) வாரியாக நடைபெறும்.
- முனைவர் பட்டம் பதிவு செய்வதற்கான வயது வரம்பு 60 ஆண்டுகள் ஆகும்.
- நுழைவுத் தேர்வு நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் வழியாகவும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்திலும் வெளியிடப்படும்.
- நுழைவுத் தேர்வு வருடத்திற்கு ஒரு முறை மட்டும் நடைபெறும்.
- ஒரு முறை நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டுகளுக்குச் சேர்க்கை பெறத் தகுதிபெற்றவராவர். எனினும் ஒருமுறை நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர், விரும்பினால் அடுத்த ஆண்டும் நுழைவுத் தேர்வை எழுதலாம்.
- நுழைவுத் தேர்வில் தகுதிபெறுவதற்கான குறைந்த அளவு மதிப்பெண்கள்.

| | | |
|---|---|---|
| பொதுப் பிரிவு | : | 50 விழுக்காடு |
| பிற்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் (BC/MBC/DNC) வகுப்பினருக்கு | : | 45 விழுக்காடு |
| பட்டியல் / பழங்குடி (SC/ST/SC-A) வகுப்பினருக்கு | : | 40 விழுக்காடு |

முனைவர் பட்ட நுழைவுத் தேர்வில் தகுதி பெற்றவர்களுக்கு மின்னஞ்சல் வழியாக தகவல் அனுப்பப்பெறும். தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் பட்டியல் வெளியிடப்படும். நுழைவுத் தேர்வு எழுதியவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்திற்குச் சென்று (www.tamiluniversity.ac.in) தங்களது மதிப்பெண் சான்றிதழ்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**விதிவிலக்கு**

தேசியத் தகுதித் தேர்வு (NET), மாநில அளவிலான தகுதித் தேர்வு (SET), அறிவியல், தொழில்நுட்ப ஆய்வுகளுக்கான குழு-பல்கலைக்கழக நல்கைக் குழுவின் இளநிலைத் தகைமை (CSIR/UGC-JRF), முதலான தகுதித் தேர்வுகளில் தகுதி பெற்ற மாணவர்களுக்கும்/இந்தியப் பண்பாட்டு உறவுகளுக்கான குழுவின் (ICCR) நல்கை பெற்ற, பிற அயலக மாணவர்களுக்கும் முனைவர் பட்ட பொது நுழைவுத் தேர்விலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பெறும்.

# 6. நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் முறை

முனைவர் பட்ட நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் www.tamiluniversity.ac.in என்னும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள இணைப்பு (Link) வழியாக விண்ணப்பத்தை நிரப்பி அளிக்கலாம் அல்லது விண்ணப்பத்தினை www.tamiluniversity.ac.in என்ற தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்த விண்ணப்பத்துடன் உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையாக இணைத்து, **பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பத்தை அஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் **பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010** என்ற பெயரில் உரிய நுழைவுத் தேர்வுக் கட்டணத்தை (ரூ.500/-) வங்கி வரைவோலையாகப் பெற்று ரூ.50/-க்கான அஞ்சல் தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறையினை இணைத்துப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிறைவு செய்யப்பட்ட நுழைவுத் தேர்வு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**பதிவாளர்** (பொ)
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613 010.**

முனைவர் பட்ட நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க இறுதி நாள்: 07.10.2020 (நள்ளிரவு 11.59 மணி வரை)

# 7.இணைய விண்ணப்பத்தை நிறைவு செய்தல்

**விண்ணப்பத்தை இணையவழி நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்**

- தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முன்னர், கீழ்க்காணும் வழிமுறைகளைப் படிக்கவும்.

- விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முன்னர் உரிய கட்டணத்தை, தமிழ்ப் பல்கலைக்கழக இணையத்தில்(www.tamiluniversity.ac.in) https://www.onlinesbi.com/sbicollect/icollecthome.htm?corpID=873308 வழியாக கீழ்க்காணும் வழிமுறைகளின்படி செலுத்தி அதற்கான இரசீதை PDF ஆக சேமித்து வைத்துக்கொள்ளவும்.

  (1) மேற்கண்ட இணைப்பைச் சொடுக்கி **"Click Check Box to proceed for payment"** என்பதற்கு முன் உள்ள தேர்வுப் பெட்டியில் சொடுக்கவும்**(✓) I have read and accepted the terms and conditions stated above)**

  (2) பின்னர் **proceed** ஐ அழுத்தவும்.

  (3)SBIயின் பணம் செலுத்தும் பக்கத்திற்குச் சென்று **Select Payment Categoryல் CAMPUS EDUCATION APPLICATION FEE** என்ற பிரிவின்கீழ் தாங்கள் படிக்க விரும்பும் பாடத்தைத் தேர்ந்தெடுத்தும் **(எ.கா.) முனைவர் பட்டப் பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்கவும்)** பிற தரவுகளை நிரப்பியும் பணத்தைச் செலுத்தவும்.

  (4) அதற்கான இரசீதைப் பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளவும்.
- இணையவழி விண்ணப்பத்தை நிரப்பும் முன்னர் தேவையான அனைத்துச் சான்றிதழ்களையும் மின்வருடி (Scan) செய்து PDF கோப்புகளாகச் சேமித்து வைத்துக்கொள்ளவும்.
- இணையவழி விண்ணப்பத்தை www.tamiluniversity.ac.in இல் சென்று முழுமையாக நிறைவு செய்யவும்.
- இணையவழி விண்ணப்பத்தில் கேட்கும் இடத்தில் சான்றிதழ்களை PDFஆக பதிவேற்றம் செய்யவும்.
- இணையவழி விண்ணப்பத்தில் கேட்கும் இடங்களில் கட்டணம் செலுத்தியதற்கான மின் நகலை PDFஆகப் பதிவேற்றம் செய்யவும்.
- விண்ணப்பத்தை நிரப்பிய பின்னர் சரிபார்த்து (Submit ஐ Click செய்து) பதிவேற்றவும்.
- பதிவேற்றம் செய்த இறுதி விண்ணப்பத்தின் நகலை சேமித்து வைத்துக்கொள்ளவும்.

முனைவர்பட்ட நுழைவுத் தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் தங்களது விண்ணப்பத்தில் கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட அனைத்து விவரங்களையும் முழுமையாக நிறைவு செய்து அவ்விண்ணப்பத்தை இறுதி நாளுக்கு முன்பாக இணையவழியாகவோ அஞ்சல் வழியாகவோ அளிக்க வேண்டும். அஞ்சல் வழி அனுப்புவோர் விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் ஏதேனும் தேவையிருப்பின் அவற்றின் ஒளிப்பட நகலைச் சொந்தக் கையொப்பம் இட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

# 8.நுழைவுத் தேர்வுக் கட்டணம்

| | |
|---|---|
| நுழைவுத் தேர்வுக் கட்டணம் (அனைத்து பிரிவினருக்கும்) | **ரூ.500** |

# 9. நுழைவுத் தேர்வு - வினா வடிவமைப்பு

- தேர்வு நேரம்: 2 மணி
- தேர்வில் மொத்தம் 100 வினாக்கள் இடம்பெறும்.
- ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண் அளிக்கப்பெறும்.
- வினாக்கள் கொள் குறியீட்டு முறையில் (MCQ- Multiple Choice Questions) அமையும்.
- துறை சார்ந்த பாடத்திட்டத்தில் அலகு 1 முதல் அலகு 5 வரை ஒவ்வொரு அலகிலிருந்தும் 15 வினாக்கள் வீதம் 75 வினாக்கள் இடம்பெறும்
- அலகு 6ல் ஆய்வு நெறிமுறைகள் குறித்து 15 வினாக்கள் இடம்பெறும்
- அலகு 7ல் ஆய்வுத் திறன் (Research Aptitude) குறித்து 10 வினாக்கள் இடம்பெறும்

# 10. நுழைவுத் தேர்வுக்கான பாடத் திட்டம்

நுழைவுத் தேர்வுக்கான பாடத்திட்டம் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

# பகுதி -3 முனைவர் பட்டச் சேர்க்கை

# 11. முனைவர் பட்டச் சேர்க்கைக்கு விண்ணப்பித்தல்

முனைவர் பட்டச் சேர்க்கைக்கு ஜனவரி, ஜூலை பருவங்களில் தனி அறிவிப்பு வெளியிடப்படும். பின்னர் தமிழ்ப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் முனைவர் பட்டச் சேர்க்கைக்கு இணைய வழியாக விண்ணப்பிக்க வேண்டும். NET/SET/SET/JRF பிற தகுதிகள் பெற்றவர்களும், ICCR நல்கை பெற்ற, பிற அயலக மாணவர்களும் ஆண்டு முழுவதும் விண்ணப்பிக்கலாம்.

- சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் முன்னர் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.tamiluniversity.ac.in) உள்ள முனைவர் பட்ட விதிமுறைகளை (Ph.D. Regulations) நன்கு படிக்கவும்.
- நுழைவுத் தேர்வில் தேர்ச்சிபெற்ற மாணவர்களும் NET/SET /JRF முதலான தேர்வு எழுதித் தகுதி பெற்றவர்களும் அயலக மாணவர்களும் இணையவழி முனைவர்

பட்டச் சேர்க்கைக்கு விண்ணப்பித்து தேவையான சான்றிதழ்களின் நகல்களைப் பதிவேற்றம் செய்யவேண்டும்.

- தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்தில் சென்று **முனைவர் பட்டச் சேர்க்கை** என்ற இணைப்பைச் சொடுக்கி விண்ணப்பிக்கலாம்.
- முன்னர், தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் நுழைவுத் தேர்வுக்காகப் பதிவு செய்தவர்கள், தங்களது அடையாளச் சொல் (Login ID) கடவுச் சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்.

## 12. நேர்காணல்

- நுழைவுத் தேர்வில் தகுதிபெற்றவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர்.
- நேர்காணலுக்கு 1:5 என்ற விகிதத்தில் (அதாவது 1 இடத்திற்கு 5 விண்ணப்பதாரர்கள்) விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவர்.
- தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை ஆகிய இரு இடங்களில் நேர்காணல் நடைபெறும்.
- நேர்காணலின் போது தங்களது முனைவர் பட்ட ஆய்வு குறித்து 1000 சொற்களுக்கு மிகாமல் ஆய்வு வரைவைக் (4 நகல்கள்) கொண்டுவரவேண்டும்.

## 13.சேர்க்கை விண்ணப்பக் கட்டணம்

| | |
|---|---|
| பொதுப் பிரிவு | **பின்னர் அறிவிக்கப்படும்** |
| ஆதிதிராவிடர் /பழங்குடியினர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | **பின்னர் அறிவிக்கப்படும்** |

## 14. சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் முறை

முனைவர் பட்டச் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் www.tamiluniversity.ac.in என்னும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள இணைப்பு (Link) வழியாக விண்ணப்பத்தை நிரப்பி இணையவழியாகவே அளிக்கலாம். மாணவர்கள் நுழைவுத் தேர்வின்போது உருவாக்கப்பட்ட இணையக்கணக்கின் வழி உரிய கடவுச்சொல்லை இட்டு, சேர்க்கை விண்ணப்பத்தை நிரப்பலாம் அல்லது விண்ணப்பத்தினை www.tamiluniversity.ac.in என்ற தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்த விண்ணப்பத்தினை உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையாக இணைத்து **பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற பெயரில் உரிய சேர்க்கை கட்டணத்தை வங்கி வரைவோலையாகப் பெற்று ரூ.50/-க்கான அஞ்சல் தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறையினை இணைத்துப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.
நிறைவு செய்யப்பட்ட சேர்க்கை விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**பதிவாளர்(பொ)**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613010.**

முனைவர் பட்டச் சேர்க்கைக்கான அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும்.

# 15. விண்ணப்பத்தை இணையவழி நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்டச் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்யும் முன்னர், இக்கையேட்டின் பக்கம் 10ல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்.

**நேர்காணலுக்கு வரும்பொழுது கொண்டுவர வேண்டியவை:**

1. பதிவேற்றம் செய்த விண்ணப்பத்தின் நகல்
2. தேவையான சான்றிதழ்களின் 2 நகல்கள்
3. அசல் சான்றிதழ்கள்
4. இரு கடவுச்சீட்டு அளவிலான புகைப்படங்கள்
5. ஆய்வு வரைவு (1000 சொற்களுக்கு மிகாமல்)

## 16.சேர்க்கை தொடர்பான கட்டண விவரங்கள்

| வ.எண் | கட்டண விவரங்கள் | தொகைரூ |
|---|---|---|
| 1. | பதிவுக் கட்டணம் | 1,000 |
| 2. | கல்விக் கட்டணம் – முழுநேரம் / பகுதிநேரம் (ஆண்டொன்றுக்கு) | 8,000 |
| 3. | காப்புத்தொகை – திரும்பப்பெறத்தக்கது (கலைத்துறைகள்) | 1,000 |
| 4. | காப்புத்தொகை – திரும்பப்பெறத்தக்கது (அறிவியல் துறைகள்) | 2,000 |
| 5. | அஞ்சல் செலவு | 1,000 |
| 6. | இணைய கட்டணம் | 1,000 |
| 7. | நூலக வைப்புத் தொகை (திரும்பப்பெறத்தக்கது) | 1,000 |
| 8. | சிறப்புக் கட்டணம் | 1,000 |
| 9. | விளையாட்டுக் கட்டணம் | 200 |
| 10. | பிற பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்றல்<br>**அ**) தமிழகப் பல்கலைக்கழகங்கள்<br>**ஆ**)பிறமாநிலப் பல்கலைக்கழகங்கள்<br>**இ**) பிறநாட்டுப் பல்கலைக்கழகங்கள் | <br>200<br>1,000<br>5,000 |
| 11. | ஆய்வகக் கட்டணம் (அறிவியல் துறைகளுக்கு மட்டும்) | 1,500 |
| 12. | வளாக நேர்காணல் | 100 |
| 13. | வெளிநாட்டு மாணவர்கள் ஆண்டுக் கல்விக் கட்டணம்<br>முழுநேரம் / பகுதிநேரம் | 20,000 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கல்விக்கட்டணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்ட ஆய்வு மையங்களில் பயிலும் மாணவர்களுக்கும் பொருந்தும்.

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**பின்னிணைப்பு 1: முனைவர்பட்டச் சேர்க்கைக்கான படிப்புகள் தகுதிகள், ஒழிவிட விவரங்கள் (2020)**

| துறையின் பெயர்<br><br>1 | முனைவர் பட்டப் படிப்பு<br><br>2 | முனைவர் பட்டப் படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பத்தாரரின் முதுகலை/முதுஅறிவியல் பாடத் தகுதிகள்<br>3 | ஒழிவிட விவரம்* (2020)<br><br>4 |
|---|---|---|---|
| சிற்பத்துறை | 1.வரலாறு - HISTORY<br>2.வரலாறு -நுண்கலை<br>History - Fine Arts<br>3. கலைவரலாறு - Art History<br>4.Fine Arts - நுண்கலை<br>5.HISTORY-Sculpture<br>வரலாறு - சிற்பம் | முதுகலை வரலாறு - M.A. History<br>முதுகலை நுண்கலை<br>M.A. Fine Arts (Sculpture and Paintings) | 1 |
| இசைத்துறை | 1.இசை - Music<br>2.பரதநாட்டியம் - Bharathanatiyam | முதுகலை இசை M.A - M.F.A.(Music)<br>முதுகலை பரதநாட்டியம்<br>M.A., M.F.A. Bharathanatiyam | 1 |
| நாடகத்துறை | - | - | - |
| ஓலைச்சுவடித்துறை | 1.தமிழ் - Tamil<br>2.தமிழ் - சுவடியியல்<br>Tamil -Manuscriptology | முதுகலைத் தமிழ் - M.A. Tamil | 1 |
| | 1.வரலாறு - History<br>2.வரலாறு - சுவடியியல்<br>History - Manuscriptology | முதுகலை வரலாறு - M.A. History | |
| அரியகையெழுத்துச் சுவடித்துறை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - M.A. Tamil | 6 |
| கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை | 1.வரலாறு - History<br>2.வரலாறு - கல்வெட்டியல்<br>History-Epigraphy | முதுகலை வரலாறு – M.A History<br>முதுகலை வரலாறு மற்றும் தொல்லியல் - M.A. History & Archaeology | - |
| கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை | 1.தொல்லியல் - Archaeology<br>2.வரலாறு – History | முதுகலை தொல்லியல்<br>M.A. Archaeology | - |

| | | | |
|---|---|---|---|
| | 3. கடல்சார் தொல்லியல் Marine Archaeology | முதுகலை வரலாறு - M.A. History<br>முதுகலை வரலாறு மற்றும் தொல்லியல் - M.A. History&Archaeology | |
| அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - M.A. Tamil | 5 |
| மொழிபெயர்ப்புத் துறை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - M.A. Tamil | 8 |
| | 2.மொழிபெயர்ப்பியல் - Translation | முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை ஆங்கிலம் - M.A. English | |
| | 3.ஆங்கிலம் - English | முதுகலை ஆங்கிலம் - M.A. English | |
| | 4. மொழியியல் - Linguistics | முதுகலை மொழியியல் M.A. Linguistics<br>முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை ஆங்கிலம் - M.A. English | |
| அகராதியியல் துறை | 1.தமிழ் - Tamil<br>2.அகராதியியல் - Lexicography | முதுகலைத் தமிழ், முதுகலை மொழியியல் - M.A.Tamil, M.A. Linguistics | 5 |
| சமூகஅறிவியல் துறை | 1.சமூகப்பணி - Social Work<br>2.சமூகவியல் - Sociology | முதுநிலை சமூகப்பணி -Social Work<br>முதுகலை சமூகவியல்-M.A. Sociology | 6 |
| அறிவியல்தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - M.A. Tamil<br>முதுகலை மொழியியல் - M.A. Linguistics | 4 |
| கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை | 1.கல்வியியல் - Education | கல்வியியல் நிறைஞர் - M.Ed. Education | 3 |

| | | | |
|---|---|---|---|
| இலக்கியத் துறை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் | 2 |
| மொழியியல் துறை | 1.மொழியியல் - Linguistics | முதுகலை மொழியியல்,<br>M.A. Linguistics<br>முதுகலை ஆங்கிலம்<br>M.A. English<br>முதுகலைத் தமிழ்<br>M.A. Tamil | 4 |
| | 2.ஆங்கிலம் - English | முதுகலை ஆங்கிலம் M.A. English | |
| மெய்யியல் துறை | 1.மெய்யியல் - Philosophy<br>2.கோயில் நிருவாகம் - Temple Management<br>3. யோகா - Yoga<br>4.பண்பாடு - Culture | முதுகலை மெய்யியல், இந்தியப் பண்பாடு, யோகா, சமயம் சார்ந்த படிப்புகள்<br>PG in Philosophy, Indian Culture, Yoga & Religious Studies | 4 |
| பழங்குடி மக்கள் ஆய்வு மையம் | 1.மொழியியல் - Linguistics<br>2.மானுடவியல் – Anthropology | முதுகலை மொழியியல்,<br>முதுகலை மானுடவியல்<br>M.A Linguistics,<br>M.A Anthropology | 2 |
| நாட்டுப்புறவியல் துறை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil | 10 |
| | 2.நாட்டுப்புறவியல் - Folklore | முதுகலை நாட்டுப்புறவியல் - MA Folklore | |
| இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil | 3 |
| | 1.ஒப்பிலக்கியம் - Comparative Literature | முதுகலைத் தமிழ், ஏதாவது ஒரு இந்திய மொழியில் முதுகலைப் பட்டம்<br>MA Tamil, PG in any Indian Language | |
| சித்தமருத்துவத் துறை | 1.சித்தமருத்துவம் - Siddha Medicine<br>2.உயிர்த் தொழில்நுட்பவியல் Biotechnology<br>3.உயிர்வேதியியல் - Biochemistry<br>4.நுண்ணுயிரியல் - | எம்.டி (சித்தா), சித்தமருத்துவம், மருந்து அறிவியல் தொடர்புடைய பாடங்கள்<br>M.D. Siddha, Pharmacheutical Sciences, related subjects | 5 |

| | | | |
|---|---|---|---|
| | Microbiology<br>5.தாவரவியல் - Botany<br>6.வேதியியல் - Chemistry<br>7.மருத்துவத்தாவரவியல்<br>Medicinal Botany<br>8.மருந்துஅறிவியல்<br>Pharmaceutical Sciences | | |
| தொழில் மற்றும் நிலஅறிவியல் துறை | 1.நிலத்தியல் - Geology<br>2.பயன்பாட்டு நிலத்தியல் - Applied Geology<br>3. நிலஅறிவியல் - Earth Science<br>4.தொலையுணர்வியல் - Remote Sensing<br>5.புவியியல் - Geography<br>6.புவிசார்தகவலியல் - Geoinformatics | முது அறிவியல் – நிலத்தியல், தொடர்புடைய பாடங்கள்<br>PG in Geology, Earth Sciences, related subjects | - |
| தொல்லறிவியல் துறை | 1.Botany - தாவரவியல்<br>2. உயிர்த் தொழில்நுட்பவியல் - Biotechnology<br>3.பட்டு வளர்ப்பு - Sericulture<br>4.வனவியல் - Forestry | முது அறிவியல் - தாவரவியல், தொடர்புடைய பாடங்கள்<br>PG in Botany, related Subjects | - |
| | 1. கணிதம் - Mathematics | முது அறிவியல் கணிதம் - PG in Mathematics | - |
| கட்டடக்கலைத் துறை | - | - | - |
| கணிப்பொறி அறிவியல்துறை | 1.கணிப்பொறிஅறிவியல்<br>Computer Science | M.Sc., Computer science / Information Technology / M.C.A<br>முது நிலை கணிப்பொறி அறிவியல், தகவல் தொழில்நுட்பவியல், முது நிலை கணினிப் பயன்பாட்டியல் | 2 |
| சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை | 1.சுற்றுச்சூழல்அறிவியல்<br>Environmental Science<br>2.சுற்றுச்சூழல்- உயிர்த் தொழில்நுட்பவியல்<br>Environmental Biotechnology | முது நிலை சுற்றுச்சூழல் அறிவியல், உயிர் அறிவியல், தொடர்புடைய பாடங்கள்<br>PG in Environmental Sciences, related subjects | 4 |

| | | | |
|---|---|---|---|
| | 3.சுற்றுச்சூழல் நுண்ணுயிரியல்<br>Environmental Microbiology<br>4.நுண்ணுயிரியல் -<br>Microbiology<br>5.உயிர்த் தொழில்நுட்பவியல் -<br>Bio-technology<br>6. சுற்றுச்சூழல் மேலாண்மை<br>Environmental Management | | |
| நூலகம் | 1.நூலகம் மற்றும்<br>தகவல் அறிவியல்<br>Library and information Science | முதுநிலை நூலகம் மற்றும்<br>தகவல் அறிவியல்<br>PG in Library and information Science | 4 |
| **ஏற்பளிக்கப்பட்ட ஆய்வுமையங்கள்** | | | |
| உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை | 1.தமிழ் - Tamil | முதுகலைத் தமிழ் - MA Tamil | 7 |
| | 2. மொழியியல் - Linguistics | முதுகலைத் தமிழ், முதுகலைத் மொழியியல்<br>MA Tamil, M.A. Linguistics | 5 |
| | 3. நாட்டுப்புறவியல் - Folklore | முதுகலை நாட்டுப்புறவியல்<br>M.A. Folklore | - |
| புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் | - | - | - |

*NET / SET / UGC-CSIR JRF – தேர்வுகளில் தகுதி பெற்றோர் சேர்க்கை, வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கை அல்லது இடைப்பட்ட காலத்தில் ஆய்வேடுகளை அளித்தல் ஆகியவற்றால் ஒழிவிடங்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படலாம்.

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010

## முனைவர் பட்டப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு

## விண்ணப்பம்

## TURCET APPLICATION

வண்ண நிழற்படம் கடவுச்சீட்டு அளவு

| | | | |
|---|---|---|---|
| 1. | Application Number<br>விண்ணப்ப எண் (அலுவலகப் பயன்பாட்டிற்கு) | : | |
| 2. | Applicant Name<br>விண்ணப்பதாரர் பெயர் | : | |
| 3. | Father's / Guardian Name<br>தந்தை/பாதுகாவலர் பெயர் | : | |
| 4. | Mother's Name<br>தாய் பெயர் | : | |
| 5. | Communication Address<br>தொடர்புமுகவரி | : | |
| 6. | Mobile Number with WhatsApp<br>கட்செவி உள்ள அலைபேசி எண்: | : | |
| 7. | Email<br>மின்னஞ்சல் | : | |
| 8. | Date of Birth<br>பிறந்த நாள் | : | **நாள்** / **மாதம்** / **ஆண்டு** |
| 9. | Gender<br>பாலினம் (✓ குறியிடவும்) | : | Male / Female / Transgender<br>ஆண் / பெண் / மூன்றாம் பாலினம் |
| 10. | Adhaar Number & Attach Photocopy<br>ஆதார் எண்: நகல் இணைக்கவும் | : | |
| 11. | Are you NRI? / Are you PIO?<br>அயலகம் வாழ் இந்தியரா? இந்தியக் குடிவழியினரா? | : | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12. | Community / Category (ST/SC/SC-A/MBC/DNT/BC)<br>சாதி/பிரிவு (ST/SC/MBC/DNT/BC)<br>(✓ குறியிடவும்) | : | **பழங் குடியினர்**<br>ST | **பட்டியல் இனம்**<br>SC | **அருந் ததியினர்**<br>SC-A | **பிற்பட்ட வகுப்பு**<br>BC | **மிகவும் பிற்பட்ட வகுப்பு / சீர்மரபினர்**<br>MBC / DNT | **பிற வகுப்பு**<br>**Others** |
| 13. | *Differently abled Person. Attach Proof.*<br><u>மாற்றுத்திறனாளியா? ஆம் எனில் சான்று இணைக்கவும்</u> | : | | | | | | |

# 14. கல்வித் தகுதிகள்

| வகுப்பு | பதிவு எண் | தேர்ச்சி பெற்ற மாதம்/ஆண்டு | அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மொத்த மதிப்பெண் | மதிப்பெண் விழுக்காடு | பயின்ற கல்வி நிறுவனம் / கல்லூரி / பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | | | | | |
| பன்னிரெண்டாம் வகுப்பு | | | | | |
| இளநிலைப் பட்டப்படிப்பு | | | | | |
| இளநிலைப் பட்டப்படிப்பு | 1. Subject / பாடம்<br>2. Obtained / Total Marks:<br>பெற்ற மதிப்பெண் / மொத்த மதிப்பெண்:<br>3. CGPA: ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி:<br>4. Grade point தரப்புள்ளி | | | | |
| முதுநிலைப் பட்டப்படிப்பு | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதுநிலைப் பட்டப்படிப்பு | 1. Subject / பாடம்<br>2. Obtained / Total Marks:<br>பெற்ற மதிப்பெண் / மொத்த மதிப்பெண்:<br>3. CGPA: ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி:<br>4. Grade point தரப்புள்ளி | | | | |
| ஆய்வியல் நிறைஞர் | | | | | |
| | 1. Subject / பாடம்<br>2. Obtained / Total Marks:<br>பெற்ற மதிப்பெண் / மொத்த மதிப்பெண்:<br>3. CGPA: ஒட்டுமொத்த தரப்புள்ளி சராசரி:<br>4. Grade point தரப்புள்ளி | | | | |

| | | | |
|---|---|---|---|
| 15. | Medium of TURCET Exam<br>நுழைவுத்தேர்வு எழுதும் மொழி | : | **தமிழ்/ஆங்கிலம்<br>Tamil/English** |
| 16. | Subject of Ph.D<br>முனைவர் பட்டப் படிப்பின் பாடம் | : | |
| 17. | Department/Research Centre in Which admission is sought<br>முனைவர் பட்டச் சேர்க்கை பெற விழையும் துறை/ஆய்வு மையம் | : | |
| 18 | நுழைவுத் தேர்வு மையம்<br>Exam Centre | : | **தஞ்சாவூர் / Thanjavur<br>சென்னை / Chennai** |

## 19. விண்ணப்பக்கட்டணம் செலுத்திய விவரம்

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர்<br>Name of the Bank | : | |
| வரைவோலை / இரசீது எண் மற்றும் நாள் :<br>DD / Receipt No. & Date | : | |
| விண்ணப்பக் கட்டணம் | : | **ரூ.** |

## 20.உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும் ஏதேனும் தவறு இருப்பின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

இடம் :

நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்

## குறிப்பு:

- முழுமையாக நிறைவு செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட படிகள் இணைக்கப்பெற வேண்டும். 1.மாற்றுச் சான்றிதழ் 2. மதிப்பெண் சான்றிதழ் 3. பட்டச் சான்றிதழ் 4. சாதிச் சான்றிதழ் 5. ஆதார் நகல் 6. கடவுச்சீட்டு அளவுள்ள வண்ண நிழற்படம் (2)

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010

## முனைவர் பட்டச் சேர்க்கை விண்ணப்பம்

| வண்ண நிழற்படம் கடவுச்சீட்டு அளவு |
|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | Application Number<br>விண்ணப்ப எண் | : | |
| 2. | Applicant Name<br>விண்ணப்பதாரர் பெயர் | : | |
| 3. | Father's / Guardian Name<br>தந்தை/பாதுகாவலர் பெயர் | : | |
| 4. | Mother's Name<br>தாய் பெயர் | : | |
| 5. | Communication Address<br>தொடர்புமுகவரி | : | |
| 6. | Mobile Number<br>அலைபேசி எண் | : | |
| 7. | Mobile Number with WhatsApp<br>கட்செவி உள்ள<br>அலைபேசி எண்: | : | |
| 8. | Email<br>மின்னஞ்சல் | : | |
| 9. | Secondary Email (optional)<br>இரண்டாவது மின்னஞ்சல்<br>(இருப்பின்) | | |
| 10. | Permanent Address<br>நிரந்தர முகவரி | | |

| | | | |
|---|---|---|---|
| 11. | Adhaar Number & Attach Photocopy<br>ஆதார் எண்:<br>நகல் இணைக்கவும் | | |
| 12. | Date of Birth<br>பிறந்த நாள் | : | **நாள்** / **மாதம்** / **ஆண்டு** |
| 13. | Gender<br>பாலினம் (✓ குறியிடவும்) | : | Male / Female / Transgender<br>ஆண் / பெண் / மூன்றாம் பாலினம் |
| 14. | Is NRI<br>அயல் நாடு வாழ் இந்தியரா? | : | |
| 15. | Are you NRI? / Are you PIO?<br>அயலகம் வாழ் இந்தியரா?<br>இந்தியக் குடிவழியினரா? | : | |
| 16. | Community / Category<br>(ST/SC/SC-A/MBC/DNT/BC)<br>சாதி/பிரிவு<br>(ST/SC/MBC/DNT/BC)<br>(✓ குறியிடவும்) | : | **பழங் குடியினர்** ST / **பட்டியல் இனம்** SC / **அருந்ததியினர்** SC-A / **பிற்பட்ட வகுப்பு** BC / **மிகவும் பிற்பட்ட வகுப்பு / சீர்மரபினர்** MBC / DNT / **பிற வகுப்பு Others** |
| 17. | *Differently abled Persons*<br>மாற்றுத்திறனாளியா? ஆம் எனில் சான்று இணைக்கவும் | : | |

## 18. கல்வித்தகுதிகள்

| படிப்பு programme | பாடம் பயின்ற வாரியம் – கல்லூரி / பல்கலைக்கழகம் / Subject Board University - College | பதிவு எண் / Registration No | பாடம் subject | தேர்வுற்ற நாள் / Date of Passing | மதிப்பெண் / Marks | | ஒட்டு மொத்தத் தரப்புள்ளியின் சராசரி /CGPA | தரப்புள்ளி / Grade Point |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெற்றது / Obtained | மொத்தம் / Maximum Mark | | |
| பத்தாம் வகுப்பு / 10th Std | | | | | | | | |
| பன்னிரண்டாம் வகுப்பு / 12thStd | | | | | | | | |
| இளநிலை / UG | | | | | | | | |
| முதுநிலை / PG | | | | | | | | |
| ஆய்வியல் நிறைஞர் / M.Phil | | | | | | | | |

| | | | |
|---|---|---|---|
| 19. | TURCET Entrance Exam Details or NET /SET/ CSIR-UGC JRF<br>தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் பட்ட பொது நுழைவுத் தேர்வு அல்லது NET /SET/CSIR-UGC JRF தேர்ச்சியுற்ற விவரம் | | மதிப்பெண் _____ விழுக்காடு |
| 20. | Project / ICCR Fellowship<br>திட்டத் தகைமை/ இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழுத் தகைமை | : | |
| 21. | Programme Mode : Full-time / Part-time<br>முழு நேரம்/பகுதி நேரம் | : | |
| 22. | Service details<br>பணி விவரம் | : | |

| | | | |
|---|---|---|---|
| 23. | *If part-time attach NOC*<br>*பகுதி நேரம் எனில் பணிபுரியும் நிறுவனத்தின் தடையில்லாச் சான்று அளிக்கவும்* | : | |
| 24. | Subject / Discipline முனைவர் பட்டப் பாடம் | : | |
| 25. | Inter-disciplinary Subject (If any)<br>துறையிடைப்பாடம் (தேவைப்படின்) | : | |
| 26. | Department / Research Center in Which admission is sought<br>முனைவர் பட்டம் சேர விரும்பும் துறை / ஆய்வு மையம் | : | |
| 27. | Broad area / Research Topic ஆய்வுக் களம் / ஆய்வுத் தலைப்பு<br>ஆய்வு வரைவை இணைக்கவும் (1000 சொற்களுக்கு மிகாமல்) | : | |

## 28. விண்ணப்பக்கட்டணம் செலுத்திய விவரம்

| | | |
|---|---|---|
| வங்கியின் பெயர்<br>Name of the Bank | : | |
| வரைவோலை / இரசீது எண் மற்றும் நாள் :<br>DD / Receipt No. & Date: | : | |
| *Application Fees*<br>*விண்ணப்பக் கட்டணம்*<br>பொதுப்பிரிவினர் BC/MBC- ரூ.500<br>SC/SC-A/ST - ரூ.250.00 | : | ரூ. |

# 29.உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும் ஏதேனும் தவறு இருப்பின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

இடம் :

நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**குறிப்பு :**

- முழுமையாக நிறைவு செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட படிகள் இணைக்கப்பெற வேண்டும். 1.மாற்றுச் சான்றிதழ் 2. மதிப்பெண் சான்றிதழ் 3. பட்டச் சான்றிதழ் 4. சாதிச் சான்றிதழ் 5. ஆதார் நகல் 6. கடவுச்சீட்டு அளவுள்ள வண்ண நிழற்படம் (2)